பிரக்ஞானம் பிரம்ம

# ஞான விருட்சம்

# Wisdomtree

## வாழ்வை மாற்றும் புதியதோர் ஆன்மீக அகப்பார்வை அனுபவம்

இது ஒரு பகுத்தறிவு ஆன்மீக நூல் ......!


WRITTEN BY
RA.JEGATHEESWARAN

wisdomtamil வெளியீடு.

# முகவுரை



**பரந்து விரிந்த பூமி தோட்ட பாதை ஓரத்தில் நான் கண்டு வியந்த ஞான விருட்சம் இது**. இந்தஞான விதையை பூமியில் பயிரிட வந்த கோடானுகோடி ஆன்மீகஞானிகளும், யோகிகளும், எம்சித்தர்களும், ஆன்மீக பெருமக்களும் பிரபஞ்ச வெளிகளில் விட்டுச் சென்ற எண்ணற்ற ஞான விதைகளில் சிலவற்றை உங்களின் உள்ளங்களை நோக்கி வார்த்தைகளாய் விதைத்து மகிழ்கிறது இந்த **ஞான விருட்சம்.**
இந்த தோட்டம் என்னுடையதல்ல.
இந்த விதையும் என்னதல்ல.
இதன் பயனும் எனக்கல்ல.
அறுவடையும்,பயனும் அத்தனையும் உங்களுக்குரியதே.. இப்போது இந்த தோட்டத்தின் வேலைக்காரர்களில் நானும் ஒருவன் அவ்வளவு தான்.
எனக்கான ஊதியம் நிச்சயமாக உண்டு. இந்த தோட்டத்திற்குரியவன் கூறும்போது நான் இந்த தோட்டத்தைவிட்டு புறப்பட்டு விடுவேன். உயிர்கள் உள்ளவரை இந்த விவசாயம் தொடர்ந்து நடந்துகொண்டே தான் இருக்கும். வேலைக்காரர்கள் மட்டும் மாறிக் கொண்டே இருப்பார்கள். விதை விழுந்தால் உடன் முளைக்கும் சக்தியூட்டமுள்ள மண்ணைப்போல.. உங்களின் மனதும் எப்போதும் தயாராக உணர்வூட்டமாக இருக்கட்டும்..
**ஒரு விதை வாங்கி ஓராயிரம் கனி கனிகளை கொடுக்கும் ஞான விருட்சம் உங்கள் ஒவ்வொரு ஆன்மாவுக்குள்ளும் உறங்கிக் கொண்டிருக்கிறது என்பதை மறந்து விடாதீர்கள்.** கிடைத்தற்கரிய இந்த ஞான விதைகளுக்கு மீண்டும் மீண்டும் உணர்வு ஊற்றி வளருங்கள். ஞான பெரு விருட்சமாய் அது ஒரு நாள் உங்கள் முன் வளர்ந்து நின்று பயன் தரும்.
அது மட்டுமல்ல உயர்ந்த ஆத்மாக்களின் நிழலாகவும் அது விளங்கும்.
**ஒவ்வோரு மனித உயிரிலும் இணையற்ற ஒரு மாபெரும் பொக்கிஷம் ஒளிந்து கொண்டு கிடக்கிறது.**அதன் சாவியும் அவனுக்குள்ளே தான் இருக்கிறது. அதை அடைவதற்கான சிறு குறிப்பு என்று வேண்டுமானால் இந்நூலை வைத்துக் கொள்ளுங்கள். ஆனால் அறியாமையும், அவன் கர்மாவும் கண்களையும், காதுகளையும், உணர்வுகளையும் மறைத்தது நிற்கிறது. பல்வேறு சந்தர்ப்பங்களில் யாரோ ஒருவர் இதை மீண்டும் மீண்டும் காதில் கூறிக்கொண்டே தான் இருந்தாலும்,உணரும் காலம் வரும் போதே இது உணரப்படுகிறது.
சக மனிதனிடமிருந்து வரும் பாராட்டுவார்த்தைகள் மனதை மகிழ்விக்கிறது. வெறுப்பான வார்த்தைகள் மனதை காயப்படுத்துகின்றது. ஆனால் இவை எல்லாம் ஒருமொழியின் வெறும் ஒலிகள் மட்டும் (சத்தம்) தானே !
கவலைப்படுவதும்,துன்பப்படுவதும், மகிழ்ச்சிப்படுவதும், துடி துடித்துப் போவதும் இந்த மனசுக்குள் தான் என்று தெரிந்தும் அதிலிருந்து ஏன் மீளமுடியவில்லை?
ஒரு யோகிக்கும், சாமானியனுக்கும் என்ன வேறுபாடு என்றால், **என்னதான் மகிழ்ச்சி மனதுக்குள் நிகழ்ந்தாலும் , மகிழ்ச்சிக்கான காரணங்கள் அனைத்தும் அவன் மனதிற்கு வெளியேயிருந்து (ஒரு ரிமோட் கண்ட்ரோல் போல) அவனைக் கட்டுப்படுத்தினால் அவன் சாமானியன். கட்டுப்படுத்தும் காரணங்களை எதையும் புறம் சார்ந்து இல்லாமல் தன் அகக்கட்டுப்பாட்டில் வைத்திருப்பவன் யோகி. (ரிமோட் கண்ட்ரோல் தன் வசம் வைத்திருப்பவன்.)**




**ஆன்மீகமும், மருத்துவமும் ஒன்றை ஒன்று சந்தித்துக் கொள்ளும் முக்கியமான இடங்களில் ஒன்று மனோதத்துவம்**.
மனம் சம்பந்தப்பட்ட **நோயை கட்டுப்படுத்துவது எப்படி** என்ற கவலை மனோதத்துவத்திற்கு...
**மனதை கட்டுப்படுத்துவது எப்படி** அதை வென்று விடுவது எப்படி என்ற பொதுவான அக்கறை ஆன்மீகத்திற்கு.
உடல் எண்ணங்களினதும் உணர்வுகளினதும் கட்டளைகளுக்கு அடிபணிய காத்திருக்கும் வேலைக்காரன்.
மனதை புரிந்து கட்டுப்படுத்த முடிந்தவர்களால், தன் தவறுகளால் வருகின்ற பெரும்பாலான நோயிலிருந்தும் உடலையும் காப்பாற்ற முடியும்.
**நோயும்,மூப்பும்,மரணமும் தவிர்க்க முடியாதவைகள்** ஆனாலும் கட்டுப்பாட்டில் இல்லாதவைகளுக்கு கவலைப்படுவதை விட்டு விட்டு. சுயகட்டுப்பாடுகள் மூலம் இவைகளை கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள நிச்சயமாக முடியும்.
**யார் யாரெல்லாம் தன்னோடு தான் எப்படியான உறவு நிலையில் இருக்கிறார்களோ.. அவர்கள் தன்னை சுற்றி உள்ளவர்களோடும் அதே உணர்வையே தூண்டுகின்றார்கள்**.
அல்லது வெளிப்படுத்துகின்றார்கள்..இல்லை அதே உணர்வைத் கவர்ந்திழுத்துக் கொள்கிறார்கள்.
தன்னை தானே வெறுக்கும் ஒரு நபர் எதிரில் உள்ளவர்களிடம் ஏதாவது ஒரு வடிவத்தில் அதே வெறுப்பையே வெளிப்படுத்துகிறார்.
**தன்னை தானே நேசிக்கும் ஒரு நபரால் வெகு இயல்பாக பிறர் மீதும் தூய அன்பை வெளிப்படுத்த முடிகிறது.**

**ஒரு பாத்திரம் மூடியிருந்த போதும் அதில் என்ன இருக்கிறது என்பதை அதன் நறுமணம் எப்படி வெளிப்படுத்தி விடுமோ அது போல...**
இதனால் தான் ஒரு சோகமான இடத்தில், அல்லது பயம் நிறைந்த இடங்களில் யாராலும் மகிழ்ச்சியான இருக்க முடிவதில்லை.அதற்கு அதிர்வுகளும் ஒரு காரணமாக இருக்கிறது. ஏனென்றால் **ஒவ்வொரு உணர்வுகளுக்கும் ஒரு பிரத்யேக அதிர்வு அலைகள்** உண்டு.எவ்வாறான உணர்ச்சி சூழ்நிலைகள் அந்த இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறதோ..! அதன் தாக்கம் அந்த சூழ்நிலைகளில் ஆதிக்கம் செலுத்தக் கூடியது.
உணர்வு நிலையில் பலவீனமான அனைத்து மனிதர்களின் மீதும் அந்த உணர்வு அலை தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. ஞானத்தோடு இருப்பது ஒரு கலை.**மகிழ்ச்சி என்பது நீங்கள் விரும்புவதைப் பெறுவதல்ல. உங்களிடம் இருப்பதை நேசிப்பதும், அதற்கு நன்றியுடன் இருப்பதும் ஆகும்**
எதனுடனும் சம்பந்தம் இல்லாத ஒரு தனியான ஒரு உயிர் என்றோ ! தனியான உருவம் என்றோ! தனியான பொருள் என்றோ எதையும் கூறிவிட முடியாது. பரந்து விரிந்து கிடக்கும் இந்த பிரபஞ்சத்தில் எல்லாமே ஒன்றோடு ஒன்று ஒரு தொடர்போடு தான் இருக்கிறது .ஒன்றில் எல்லாமாக , எல்லாவற்றிலும் ஒன்றாக இருப்பது ஒன்றே ஒன்று மட்டுமே.
இங்கு **பயனற்றதும் திறனற்றதும் என்று எதுவுமில்லை. உதிரும் இலைகள் ஒவ்வொன்றும் ஞானச்சொற்பொழிவு. ஒவ்வொரு கனியும் இன்னொரு ஞான விருட்சம்.**




**உங்கள் சுயத்தோடு நீங்கள் (உங்களோடு நீங்கள்) செய்து கொள்ளும் உறுதி மொழியை ஒருபோதும் உதாசீனம் செய்யாதீர்கள்.** அப்படி தொடர்ந்து செய்து வந்தால் உங்கள் சுய மதிப்பீட்டை நீங்கள் இழந்துவிடுவீர்கள்.
அது என்ன சுயமதிப்பீடு ?
உங்களைப்பற்றி நீங்கள் என்ன நினைத்து வைத்திருக்கிறீர்கள் ?
உங்களுக்கு நீங்கள் கொடுக்கும் மதிப்பு.

நாளையிலிருந்து வழமையைவிட ஒரு மணி நேரம் முன் எழுந்து உடல் ஆரோக்கியத்திற்காக ஏதாவது ஒன்றை செய்யப் போகிறேன் ! என்றோ அல்லது இன்றிலிருந்து நான் நேரத்திற்கு உறங்கச் செல்லப் போகிறேன்! என்று ஆரம்பிக்கும் போதே .... இதெல்லாம் நடக்கிற காரியமாப்பா? அது தான் உங்கள் உட் குரல் பேசும்...! **இது உங்கள் வாழ்க்கையில் மிகப்பெரிய தாக்கத்தை உண்டுபண்ணக் கூடியது.** கடந்த கால உங்களின் நடவடிக்கையை வைத்து அது அப்படி ஒரு கணக்கை போட்டு வைத்திருக்கும். **சராசரி மனித பலவீனங்களோடு சமரசம் செய்து கொள்ளாதீர்கள்**. அது சரி ஆன்மீகத்திற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? நிச்சயமாக உண்டு. சுய கட்டுப்பாடு, சுயஒழுக்கம், சுய மதிப்பீடு சுயபரிசோதனை இவை எதுவுமின்றி தன்னை அறிதலோ ! தன்னிலை உணர்த லோ ! நடக்க வாய்ப்பில்லை. தன்னை வெல்லாமல்.. எப்படி ஆன்மீகம் ? சொல்லப்போனால் ஆன்மீகத்தின் அடிப்படையே இது தான்.

வெளியே இருந்து வரும் எந்த விதமான அபிப்பிராயமும் உங்களை ஒன்றும் செய்யாது வேண்டுமானால் உங்கள் உணர்ச்சிகளில் தாக்கத்தை ஏற்படுத்தலாம் ஆனால் வாழ்க்கையில் மாற்றம் கொண்டுவருவது கடினம்.
வாழ்க்கையில் மாற்றம் கொண்டுவருவது உங்களின் சுயமதிப்பீடே..
மாறாக உள்ளே இருந்து வரும் சொந்த குரல் உங்களுக்கு எதிராக திரும்பினால் .. உடலும் மனமும் ஒன்றோடு ஒன்று யுத்தம் செய்யத் தொடங்கும். அதிக எதிர்மறை எண்ணங்களே தோன்றும்.
பெருமளவிலான நோய்களுக்கு இதுவே காரணமாகவும் இருக்கிறது.
எம் எதிர்பார்ப்பு எல்லாம் வெளியே இருக்கின்றன. மற்றவர்கள் என்ன நினைப்பார்கள். அடுத்தவர்கள் எம்மை தப்பாக நினைத்து விடுவார்களோ.. என்ற எண்ணங்கள் தான் அதிக முக்கியத்துவம் கொடுக்கிறோம். ஆனால் **சொந்த எண்ணங்களின் மதிப்பீடே செயல்களில் தாக்கத்தை உண்டாக்கி மாற்றங்கள் கொண்டு வரும்** என்பதை மறந்து விடுகிறோம். ஆற்றிலே ஒரு படகு பயணம் செய்கிறது. ஆற்றில் உள்ள நீர் படகு மிதக்க உதவுகிறது. **வெளியில் இருந்து வரும் விமர்சனங்கள், படகிற்கு வெளியில் இருக்கும் தண்ணீர் போன்றது.**
**படகு மேலும் உயர உதவும்**. ஆனால் **அதே ஆற்று நீர் படகுக்குள் புகுந்தால் படகை கவிந்து விடும் பெரும் ஆபத்து உண்டு**
உள்ளே இருந்து வரும் குரல்... படகுக்குள் புகுந்து கொள்ளும் நீர் போன்றது.உங்கள் சுயத்திற்கு மதிப்பளியுங்கள். உங்களோடு நீங்கள் இணக்கமாக இருங்கள்.




**நீங்கள் மகிழ்ச்சியான வாழ்க்கையை வாழ விரும்பினால், எதாவது ஒரு குறிக்கோளுடன் உங்களை இணைதுக்கொள்ளுங்கள்.**

வாழ்க்கை என்பது உங்கள் உள் தன்மையின் வெளிப்பாடு, உள்ளிருக்கும் தன்மை மாறும்போது வெளிப்புற வாழ்க்கைத்தரமும் மாறுகிறது. ஒவ்வொரு நபரிடமும், ஒவ்வொரு சூழ்நிலையிலும் நல்லதை மட்டும் தேடுங்கள். உங்களுக்கு மிகச்சிறந்த முதல் நண்பன் நீங்கள் தான் , முதலில் உங்களோடு நீங்கள் இணக்கமாய் இருங்கள். அத்தனை கனவும் உங்கள் வசப்படும்.

வாழ்க்கை அர்த்தமுள்ளதாகும்,மரணம் மதிப்புக்குரிய தாகிவிடும். . ஆன்மிக ஞான வழி என்பது எப்போதும் உள்நோக்கியே செல்கிறது. **நாளை உதவும் என்று பணத்தை சேர்த்து வைப்பது போல, உங்கள் முன்னால் உள்ள நேரத்தையும், மகிழ்ச்சியையும் நிராகரித்து, தள்ளிப்போடாதீர்கள்.பின் வருத்தப்படுவீர்கள்..இப்போது இங்கே நடப்பதும், நம்மை கடப்பதும் தான் வாழ்க்கை.** ஒரு பெரும் ஜென் துறவி இறக்கும் தருணத்தில் இருந்தார். அவரின் சீடர்களும்,அந்த ஊரின் மிகப்பெரிய செல்வந்தர்களும் அந்த துறவியின் வாயில் இருந்து வரும் ஞான உபதேசத்திற்காக காத்திருந்தார்கள். அந்த ஞானியோ தனக்கு மிகவும் பிடித்தமான ஒரு பழத்தை வரவழைத்து ரசித்து ருசித்து சுவைத்துக் கொண்டிருந்தார்.பொறுமை இழந்த அவரின் சீடன் ஒருவன் கேட்டான் குருவே எங்களுக்கு தாங்கள் கூறும் உபதேசம் என்ன? மிக மகிழ்ச்சியோடு அந்த பழத்தை சுவைத்த படியே " ரொம்ப பிரமாதமான சுவை " என்று கூறிக்கொண்டே உடல் விட்டார் அந்த துறவி.

**நம் கையில் இருக்கும் "இப்பொழுது" தான் முக்கியம். காலம் தான் பொக்கிஷம். அதை நாம் சிறப்பாக பயன்படுத்த தவறவே கூடாது**. என்பதை தான் நம்ம குரு கூறிச் செல்கிறார் என்பதை அழகாக புரிந்து கொண்டான் அந்தச் சீடன். நாமும் தெரிந்து கொள்ள வேண்டிய உண்மை இது.

மகிழ்ச்சியை தரும் விடயங்கள், கவலையை தரக்கூடிய விடயங்கள் இரண்டுமே வாழ்க்கைக்கு உள்ளே தான் இருக்கிறது. எதிர்பார்ப்புக்களும் ,ஏமாற்றங்களும் இரண்டுமே எம் மனதுக்குள் தான் நடக்கிறது.

ஒரு மனிதன் தனது செயல்களில் உள்ள தவறுகளை ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு உத்தமனாகவும், , அவற்றைத் திருத்திக்கொள்ளும் அளவுக்கு வலிமை மிக்கவனாகவும், அவற்றிலிருந்து லாபம் அடையும் அளவுக்கு புத்திசாலியாகவும் இருக்க வேண்டும்.

அறிவைப் பெற கற்றுக்கொள்ள வேண்டும், ஆனால் ஞானத்தைப் பெற, சலனமற்ற மனதோடும்,விழிப்பான கவனத்தோடும் இருந்தாலே போதும்.

ஞானம் இல்லாத அறிவு அழிவைக் கொண்டுவருகிறது.

உங்கள் செயல்கள் மூலம் ஞானத்தை வெளிப்படுத்துங்கள்.

மகிழ்ச்சியான வாழ்க்கையை உருவாக்க மிகக் குறைவான விடயங்கள் மட்டுமே போதுமானது, அது நீங்கள் சிந்திக்கும் முறையில் உள்ளது.

**ஒவ்வொரு நபரிடமும், ஒவ்வொரு சூழ்நிலையிலும் நல்லதை மட்டும் தேடுவோம்.**




**எமக்கு முன்னே இருப்பவை எல்லாவற்றையும் எம் கண்கள் கண்டுவிடுவதில்லை. மாறாக காண விரும்பு கின்றவைகள் மட்டுமே எமது கண்கள் பார்க்கின்றது.**
நமக்கு முன்னே நடக்கும் ஒரு விடயத்தை அல்லது ஒரு பொருளையோ ஆளாளுக்கு வேறுவேறுவிதமாக புரிந்து கொள்வது கூட இதனால் தான். தெளிந்த மனத்தால் இதை தெளிவாக உணர்ந்தறிய முடியும். ஒரு புத்தகத்தை படிக்கும் எல்லோருமே ஒரே மாதிரி புரிந்து கொள்வதில்லை.
அவர்களது சிந்திக்கும் முறை, அத்தோடு அவர்கள் பார்க்க விரும்புகின்ற முறை, அறிய விரும்புகின்ற முறை மட்டுமே அந்த கண்களில் படுகிறது.அவர்கள் புரிய விரும்புகின்ற விடயங்கள் மட்டுமே அவர்களுக்குப் புரிகிறது.
அதனால் தான் ஒவ்வொருவருக்கும் பல்வேறு கருத்துக்கள் உண்டு.
இயற்கையின் படைப்பில்
ஒரு மனிதனின் எண்ணம் போல் இன்னொரு மனிதனின் எண்ணம் இருப்பது இல்லை.
**ஞானம் என்பது வார்த்தைகளில் இல்லை. புரிந்து கொள்வதற்கு சிரமமானஅர்த்தங்களாய் வார்த்தைகளுக்குள்ளே அது மறைந்து கிடக்கிறது.**

**அனைத்தும் மனதில் தொடங்கி .. மனதிலேயே முடிவடைகிறது.** நீங்கள் எதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறீர்களோ, அது உங்கள் மீது அதிகாரம் செலுத்துகிறது.
ஆர்வமாக,ஆசையாக மனதில் தொடங்கும் ஒரு விடயம் , கோபமாக ,அல்லது சோகமாக , தோல்வியாக அல்லது உற்சாகமாக, மகிழ்ச்சியாக மனதில் முடிகிறது. மனம் விலைமதிப்பற்றது. இது எல்லையற்ற சாத்தியக்கூறுகளைத் திறக்கும் ஆற்றல் கொண்டது.
உங்கள் சொந்த உருவம் (self image ) பற்றி நீங்கள் கொண்டிருக்கும் எண்ணம் என்ன? அந்த உருவத்தோடு,எண்ணத்தோடு நீங்கள் நட்பாக இருக்கிறீர்களா? இல்லை முரண்பட்டுக் கொண்டுள்ளீர்களா ? கண்ணாடியில் பார்க்கும் போது உங்களை பற்றி உங்கள் உட் குரல் சொல்வது என்ன ?
அந்த குரல் உங்களை பாராடுகின்றதா இல்லை கேலி செய்கின்றதா ?
மனதோடு ஆசைகள் போர்
தேவைகளோடு வாழ்க்கை போர்
மனதோடு எண்ணங்கள் போர்.
நோயோடு உடல்கள் போர்.
உறவுகளோடு உணர்வுகள் போர்.
முடிவில்லா போர்கள், தேவை இல்லாத போர்கள். இவைகளுக்கான பதிலை கண்டுவிட்டால்... உங்களை நீங்கள் வென்றுவிட்டால்...எந்தப் போருக்கும் இங்கே அவசியம் இருக்காது. உங்கள் எண்ணத்தோடும், உருவத்தோடும், உங்களின் உட் குரலோடும் ஒரே புள்ளியில் இணக்கமாகும் போதே இந்தப்போர் ஒரு முடிவுக்கு வரும். உள்ளுக்குள் இருந்து **அமைதி,ஆன்மநேயம் ஆரோக்கியம்,உயிர் இரக்கம், இறைத்தன்மை எல்லாம் மெல்ல மெல்ல வெளிப்படும்.**




ஒரு உயிரோ அல்லது இயந்திரமோ இயங்குவதற்கு சக்தி மிக முக்கியம். சக்தி என்பது ஒரு இயக்கத்திற்கு இன்றியமையாதது. (energy) இந்த சக்தி இயற்கையாகவும் இலவசமாகவும் கிடைத்து விட்டால் ... அதன் மதிப்பு யாருக்கும் தெரிவதில்லை. இந்த சக்தி வீண் விரயம் செய்யப்படுகிறது! இது மனித உயிர்களுக்கு மட்டுமே பொருந்தும். சிந்தனைக்கும், செமிபாட்டுக்கு மட்டுமே சக்தியில் பாதி கரைந்து போக,. மீதமுள்ள சக்தியை விழிப்பற்ற தன்மையால் எப்படி நாம் அனாவசியமாக விரயம் செய்கின்றோம் ? இன்று எந்த ஆடைகளை அணிந்து கொள்வது என்ற குழப்பத்தில்? அடுத்தவர் நடவடிக்கைகளை அவதானிப்பதிலும்,குறை கூறுவதிலும் ? கோபப்படுவதற்கு எதாவது ஒரு காரணத்தை தேடுவதில் ? பிறரைப் பற்றி அவதூறு பரப்புவதில்? வீணான வெட்டிப் பேச்சில்? எம் கட்டுப்பாட்டில் இல்லாத விடயங்களுக்காக கவலைப்படுவதில் ? இதனாலேயே நாளாந்த தேவைக்குக் கூட சக்தியின்றி மன உளைச்சல்களுக்கு உள்ளாகி... நாமே நோய்க்கும் வழி செய்கின்றோம். இந்த சக்தி குறித்து நாம் ஏன் அதிக அக்கறை கொள்ள வேண்டும்? ஏனென்றால் ...எம் வாழ்வின் உயரத்தை(வளர்ச்சியை) தீர்மானிப்பது இந்த சக்தி தான். யார் ஒருவர் இந்த சக்தி நிலையில் அதி சிறப்பாக இருகிறார்களோ,அவர்களால் அந்தளவுக்கு அதி கவனத்தோடு தீவிரமாக செயற்பட முடியும். மிகச் சிறப்பான முடிவுகளையும் எடுக்க முடியும்.

இதனால் அவர்களினது வாழ்க்கை சிறப்பானதாக இருக்கும். ஆசைப்படும் அனைத்தையும் அடைய சக்தியே பிரதானம். மாறாக சோகமாக,சோம்பேறித்தனமாக, செயலற்றவர்களாக தேங்கி இருப்பதற்கு சக்தி நிலையில் பலவீனமாக இருப்பதே காரணம். ஒழுக்கம்,சுயகட்டுப்பாடு,சிறப்பான திட்டமிடல்,அளவான தூக்கம், தேவையான உணவுமுறை,சுய விழிப்புணர்வு , தியானம் .. . இவைகளின் மூலம் சக்தியை மேலும் பெற்றுக்கொள்ள முடியும். அது மட்டுமல்ல நாம் செய்கின்ற செயலுக்கு சிறந்த ஒரு காரணத்தையும் , அந்த காரணத்திற்கு உயர்ந்த ஒரு நோக்கத்தையும் கண்டறிந்து செய்தால். அந்த செயலே மேலும் மேலும் சக்தி தரும். இப்போது அந்தச்செயலை விருப்பதையோடும் மகிழ்வோடும் செய்வீர்கள்..! இப்படி ஓராயிரம் விடயங்களை கூறிவிடலாம். ஆனால் அதற்கு இங்கே அவசியமில்லை. ஏனென்றால் அதி புத்திசாலித்தனமான மனித இனம் (Homosapiens )அல்லவா நாம், ஆகவே இப்படி சொல்லிக் கொள்கிறேன். செயல்களை கவனமாக உற்று கவனித்தால்.... எங்கே தேவையற்ற சக்தி செலவழிகிறது என்று மிகத் தெளிவாக புரிந்துவிடும். இயற்கையாக எல்லோருக்குள்ளும் இந்த ஞானம் மிக ஆழத்தில் உறங்கிக்கொண்டு இருக்கிறது.

**தன்னை தான் ஆராய்ந்து சரிசெய்து கொள்ளும் மனிதனுக்குள் இருந்து இந்த ஞானம் வெளியே வருகிறது. வெளியே தன் விருப்பப்படிதான் யாவும் இருக்க வேண்டும் என்று ஆசைப்படும் மனிதர்களை விட்டு இந்த ஞானம் சற்று விலகியே இருக்கிறது.**




**குப்பைகளுக்கு குட் பாய் ..!**

குப்பைகளை உள்ளுக்குள் மூடி வைத்தால் நாற்றமெடுக்கும். அதையே வெட்ட வெளியில் கொட்டி வைத்தால் உரமாகும். கண்கள், காதுகளை மட்டும் அல்ல மனதையும் சற்றே திறந்து வைத்து கொண்டு ....இதை கவனியுங்கள்.

ஒருவன் குப்பைக்குள் குண்டுமணி அளவு தங்கத்தை தொலைத்துவிட்டு தேடுகின்றான். கிளறி கிளறி தேடிப்பார்க்கின்றான். காலம் தான் ஓடுகிறதே தவிர அத்தனை முயற்சியும் தோல்வியில் முடிகிறது. சலிப்படைந்து போகின்றான்.சந்தேகம் அவனுக்குள் கேள்வியாக எழுகிறது.

தங்கம் இங்கே தான் இருக்கிறதா ..? என்னால் அதை இனிமேலும் தேடி அடைய முடியுமா..? சலிப்பும் மெல்ல எட்டிப்பார்க்க தனது முயற்சியை முழுவதுமாக விட்டு விடுகிறான்.

இன்னும் ஒருவன் இதே முயற்சியை வேறுவிதமாக செய்கின்றான். குப்பைகளை மிகக் கவனமாக ஒவ்வொன்றாக அகற்றுகிறான். தங்கம் இங்கே தான் இருக்கிறது என்பதை முழுமையாக நம்புகிறான். தேவையற்ற குப்பைகளை, நிதானமாக,ஒவ்வொன்றாக அகற்றிக்கொண்டே செல்கிறான். அந்த குப்பை மேடு சிறிதாக...சிறிதாக..குறைந்து கொண்டே செல்கிறது. தங்கத்தை தான் நெருங்கிக் கொண்டிருப்பதாக மனம் மகிழ்கின்றான். தனது ஒவ்வொரு முயற்சியும் வெற்றியை நோக்கி முன்னேறுவதாக நம்புகின்றான். அந்த தீவிர முயற்சியால் தங்கத்தையும் இறுதியில் கண்டடைந்தான்.

இங்கே இரண்டும் ஒரே செயல் தான் ஆனால் இரண்டு வகையான மனநிலைகள். ஒன்று தனக்குத் தேவையானதை தேடுகின்ற மனநிலை.மற்றயது தேவையற்றவைகளை நீக்க முயற்சிக்கும் மனநிலை.

**கடவுளை தேடுகின்ற மனநிலையில் இருக்கும் நபராக இருந்தால் இது மிகச் சிறப்பான ஒரு செய்தி...**

உடல் மனது எல்லாம் தாண்டிய எம் ஆத்ம இருப்பு என்றும் புனிதமானது. அந்த புனிதத்தை நாம் தான் குப்பைகளால் மூடி வைத்திருக்கின்றோம்.

உலகில் உள்ள அத்தனை குப்பைகளையும் தேடி தேடி நாமே கொட்டிக் கொள்ளுகின்றோம். மாறாக உனக்குள் உள்ள தேவையில்லாதவைகளை கழித்துக் கொண்டே வர வர . அந்த தங்கத்தைப் போல .. இறுதியில் உள்ளே எஞ்சி நிற்பது இறை மட்டுமே ! அனைத்தும் அறிந்து வைத்திருப்பவர் ஒரு அறிவாளியா ?அப்படி இந்தப் பிரபஞ்சத்தில் இருக்கும் எல்லாம் தெரிந்த ஒரு அறிவாளி யார் ? அப்படிப்பட்ட ஒருவர் உண்டா ?

எது எல்லாம் தனக்கு தெரியாது என்பதை யாரொருவர் தெரிந்து வைத்திருக்கிறாரோ.அவரே மிகச் சிறந்த அறிவாளி..! அது மட்டுமல்ல. என் கட்டுப்பாட்டில் இருப்பது எது ?

என் கட்டுப்பாட்டில் இல்லாதது எது என்பதை நன்றாகப் புரிந்துணர்ந்தவர் யாரோ.. அவரே மிகச் சிறந்த அறிவாளி. அதுவே மிகச் சிறந்த ஞானமாகும்.




**அறிவு என்பது ஒரு சக்தி**
**ஞானம் ஒரு சுதந்திரம்.**

எம்மை சுற்றிலும் அத்தனை கருவிகள்…. அத்தனையும் படைத்தது யார்? இந்த அறிவுசக்தி தான். வாழ்வின் பாதுகாப்பிற்கும், தேவைகளுக்கும், வசதிக்கும் மேலாக மனிதன் படைப்புகள் நீண்டுகொண்டே செல்கிறது. இத்தனையும் ஏன்? எதற்காக? மகிழ்ச்சிக்காக..! மகிழ்ச்சி எனும் வண்ணத்துப்பூச்சியை எப்போதும் மனித மனது இந்தப் பூமியின் எல்லை தாண்டியும் துரத்திக்கொண்டே இருக்கிறது. அந்த வண்ணத்துப்பூச்சி ஒரு இடத்தில் நிரந்தரமாக உட்கார்ந்து விடுவதும் இல்லை. அது ஒன்று மாறி ஒன்றில் உட்கார்ந்து கொண்டே செல்கிறது. அதுசென்று உட்கார்ந்த பொருட்களையெல்லாம் துரத்துக்கொண்டிருக்கிறது இந்த மனசு. வண்ணத்துப்பூச்சி திடீர் திடீரென சமயங்களில் காணாமல் கூட போய்விடுகிறது. ஓடி ஓடி அதிலும் ஒரு முழுமை காண முடியாமல், மீண்டும் சலிக்காத விக்ரமாதித்தன் போல வேறொரு திசையில் ஓட தொடங்குகிறது இந்த மனசு. இப்போது எதை நோக்கி ? சுதந்திரம் என்கிறது . தான் சிக்கிக்கொண்டிருக்கும், தன்னைக்கட்டுப்படுத்திக்கொண்டிருக்கும், காயப்படுத்திக்கொண்டிருக்கும் அனைத்திலிருந்தும், விடுதலை நோக்கி சுதந்திரத்தை நோக்கி,அமைதியை நோக்கி ஓடுகிறது. அப்போது தான் அதற்கு ஒன்று தெரிய வருகிறது.

**மகிழ்ச்சி மனதுக்கு வெளியே இல்லை** எனும் உண்மை தான் அது. அந்தப் புரிதலின் பின்பு தான் உள்ளியிருந்து இந்த **ஞானம்** பிறக்கிறது. **அன்பு** புன்னகைக்கிறது.**நிம்மதி** தவழ்கிறது. ஒரு **சுதந்திரம்** இறுக்கி அணைத்துக் கொள்கிறது. வாழ்க்கையின் அர்த்தங்கள் மெல்ல புரிய தொடங்குகிறது. அன்று துரத்தி துரத்திப் பிடிக்க முடியாத **வண்ணத்துப்பூச்சி** தோள்களில் வந்தமர்ந்து ஓய்வெடுத்துச் செல்கிறது . இந்தப் பிரபஞ்சத்தில் வாழும் அனைத்தும் இருப்பதற்கு ஒரு காரணமும், ஒரு நோக்கமும் உண்டு.அந்த நோக்கத்தை ஒரு உயிர் உணர்ந்து பயணிக்க தொடங்கும் போது இப்படித்தான் பல உண்மைகள் புரியத் தொடங்குகிறது. வெறுப்பதற்கும், புறக்கணிப்பதற்கும் இங்கு எதுவுமே இல்லை. நிரந்தரமாக இங்கே எதுவுமே இல்லை. வெறுப்பை விற்று அன்பை வாங்க முடியுமா? புறக்கணிப்பை கொடுத்து கருணையை வாங்க முடியுமா?
நம்பிக்கை விற்றுவிட்டு உறவுகளை வாங்க முடியுமா? வெறுப்பதற்கும், புறக்கணிப்பதற்கும் இங்கு எதுவுமில்லை, இருளை வாழ்த்துங்கள்!படைப்பின் இரகசியம் இருள். உயிர்கள் தரித்த இடம் இருள். மண்ணுக்குள் விதை முளைத்த இடம் இருள். பெண்ணுக்குள் உயிர் வளர்த்த இடம் இருள். உயிர்களை உறங்க வைப்பது இருள். உயிருக்கு சக்தியூட்டுவது இந்த இருள். நட்சத்திரங்களும்,நிலவும் பூப்பது இருள். இந்த பிரபஞ்சத்தை உருவாகியதே இந்த இருள் தான்.**ஞானமுள்ளவன் ஒளியை மட்டும் யாசிப்பவனல்ல.இருளையும் நேசிப்பவன்.இருளை வாழ்த்துங்கள்!**




பொக்கிஷங்கள் வெளிப்படுவதைப் போலவே பூமியிலிருந்து நல்லொழுக்கமும், அதன் மூலம் நல்ல செயல்களும் தோன்றும், தூய்மையான மற்றும் அமைதியான மனதில் இருந்து ஞானம் தோன்றும். **மனித வாழ்வு இப்பிரபஞ்சத்துள் பாதுகாப்பாக நடக்க, ஞான ஒளியும், அறத்தின் வழிகாட்டுதலும் வேண்டும்.**
நம்மைப் பற்றியும், நம்மைச் சுற்றியுள்ள உலகத்தைப் பற்றியும்,வாழ்க்கையைப் பற்றியும்,நாம் எவ்வளவு குறைவாகப் புரிந்துகொள்கிறோம் என்பதை உணரும்போது உண்மையான ஞானம் நம் ஒவ்வொருவருக்கும் வருகிறது.
**உலகை வெல்ல எண்ணுபவன் தனக்கு உதவி செய்யும்படி கடவுளிடம் கேட்பான். தன்னை வென்றவன் உங்களுக்கு உதவலாமா என்று கடவுளிடம் கேட்பான்.**
நாம் ஏதோ ஒரு நோக்கத்திக்காக படைக்கப் க்கப்பட்டவர்கள் என்று நம்பவேண்டும்,எந்த விலை கொடுத்தாவது அந்த நோக்கம் அடையப்பட வேண்டும்.
அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பதை ஞானம் சொல்ல வேண்டும் . அதை எப்படி செய்வது என்று அறிவு சொல்ல வேண்டும். அதை ஏன் செய்ய வேண்டும் என்பதை அறம் சொல்ல வேண்டும்.
நல்லவை உள்ளே இருந்தால் - நல்லவைகள் மட்டுமே ஈர்க்கப்படுகிறது
தீய எண்ணங்கள் உள்ளே இருந்தால் .. தீயவைகள் மட்டுமே ஈர்க்கப்படுகிறது.
**ஒத்தவை ஒத்தவைகளையே ஈர்க்கும்.**

**மொத்தம் நான்கு மனநிலை மனிதர்கள் உண்டு.**

**முதல்நிலை**: நான் மட்டும் சரி. மற்ற அனைவரும் இங்கே தவறு எனும் மனநிலைகொண்டவர்கள்.
இவர்கள் எல்லோர் மீதும் குற்றம் சாட்டுக்களை வைப்பவர்களாகவும், குறைகூறுபவர்களாகவும், புலம்பித்தள்ளுபவர்களாகவும் , தன்னை குற்றமற்றவர் என்று நிரூபிக்க போராடுபவர்களாகவும் இருப்பார்கள்.
**இரண்டாவது நிலை** : அனைவரும் சரி, நான் மட்டும் சரியாக இல்லை என்னை தவிர எல்லாரும் சிறப்பாக வாழ்கிறார்கள், எனக்கு தான் எதுவுமே சரியில்லை என்கின்ற தாழ்வு மனநிலைகொண்டவர்கள்.
**மூன்றாவது நிலை** : நானும் சரியில்லை நீயும் சரியில்லை
உன்னால் நான் கெட்டேன் , என்னால் நீ கெட்டாய் என்பது போல்
இங்கு எதுவுமே சரியில்லை எனும் எதிர்மறை எண்ணம் கொண்டவர்கள்.
இங்கு யாருமே சரியில்லை எனும் மனநிலை
**நான்காவது நிலை:**
நான் சரி நீயும் சரி
இதுவே சரியான நிலை
உன் மனநிலையிலிருந்து நீ செய்வது சரி, என் நிலையில் இருந்து நான் சிந்திப்பதும் செய்வதும் சரிதான் எனும் நேர்மறையான,உள்ளதை உள்ளபடி ஏற்றுக்கொள்ளும் மனநிலை. இணைந்து பயணிக்கும் மனநிலை.




**மனிதன்- உடல் எனும் வீட்டில் இருந்து**
மனசு எனும் யன்னல் வழியாக தனது அனுபவம் எனும் கண்களைக் கொண்டு இந்த உலகைப் பார்க்கிறான்.
இந்த உலகமே..! அழகானது, அல்லது மோசமானது, அல்லது அழுக்கானது என்ற முடிவுக்கு வருகிறான். உலகம் அவனுக்கு எப்படித் தெரிகிறதோ ... அப்படியே நம்பவும் தொடங்குகின்றான். தன்னை ஒருபக்கத் தராசில் வைத்துக் கொண்டு இந்த உலகை எடைபோட முயலுகின்றான். அவனது அனுபவத்தில் அது சரி தான் ஆனால் இந்தக் கணிப்புக்கள் தவறானது என்ற உண்மையை அவன் உணர்ந்ததறிந்துகொள்ள பல வருடங்களோ இல்லை சில ஜென்மங்களோ கூட காத்திருக்க நேருகிறது.
ஒன்று மட்டும் அவனுக்கு எட்டினால் போதும்...
தன்னை வெல்ல முடியாதவனால் தனக்கு வெளியே இருப்பதை எப்படி வெற்றி கொள்ள முடியும்? உள்ளே முழுமையாக உணர்ந்து தெளியாத மனத்தால் தனக்கு வெளியே இருப்பதை எப்படி தெரிந்துணர முடியும்?
சுத்தம் செய்ய வேண்டியது அகக் கண்ணாடியே ...! வெல்ல வேண்டியது புறத்தை அல்ல என்கின்ற பேருண்மையை மட்டுமே.!

**அண்டத்தில் உள்ளதே பிண்டத்திலும்**
தன்னை வென்ற மனிதன் தவறுகளை வெளியே தேடிக் கொண்டிருக்க மாட்டான். தவறுகளை வெளியே தேடிக் கொண்டிருக்கும் மனிதன் தன்னை உணரவும் மாட்டான்.
எனது என்கின்றாயே ... நீ இல்லாமல் உன்னுடையது எப்படி ? ஒன்றுமே இருக்காது. ஆகவே
உடல் எனும் கருவியை நன்றாகப் புரிந்து கொள்,முதலில் அதை சிறப்பாகக் கையாள தெரிந்து கொள். மிகச்சிறந்த நேரம் இப்பொழுது தான் .மிக முக்கியமான நபர் நீ தான்.மூன்றாம் நபரின் நிலையில் இருந்து உன்னை நீ சாட்சியாக பார். அப்போது தான் சுயபுரிதலும் சுயவிழிப்பும் கிடைக்கும் . அப்படி தன்னை உற்று நோக்க முடிந்தவர்களாலும், மனதின் போக்கை புரிந்து கொண்டவர்களாலும், தன்னைதானே வென்றவர்களாலுமே .. ! நிகழ் கணத்தில் முழுமையாக கவனத்தை வைக்கமுடிகிறது.
ஏதாவது ஒரு பொருளைபுதிதாக நீங்கள் கண்டு பிடிக்க வேண்டும் என்றால்... கடுமையாக சிந்திக்க வேண்டியிருக்கும். ஆனால் சிந்தனைகள் அற்ற நிலைகளே, உங்களை நீங்களே கண்டுபிடிக்க உதவும். ஆன்மீகம் என்பது வெளியே இருந்து கிடைக்கப்பெறும் அறிவு அல்ல, உள்ளே இருந்து கிடைக்கப்பெறும் ஞானம். அறிவு என்பது ஒரு பழத்தை பற்றி படித்து தெரிந்து கொள்வது என்றால், அந்த பழத்தை சாப்பிட்டு பார்க்கும் அனுபவம் ஞானம். அறிவியல் ரீதியில் உனக்கு அது தெரியும், ஆனால் அனுபவ உணர்வில் அது எதுவுமே தெரியவில்லை.
**தெரியும் என்ற எண்ணம் உன் தேடலுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டால்,வாழ்நாள் முழுதும் இந்த ஞானம் கிடைக்க வாய்ப்பே இல்லாமல் போகக் கூட வாய்ப்புண்டு .**




**உனக்கு வெளியே இருக்கின்ற எதையும் கட்டுப்படுத்தும் அதிகாரம் உனக்கில்லை.**
கடுமையான கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ள வேண்டிய ஒரே நபரும், கட்டுப்படுத்த கூடிய ஒரே ஒரு நபரும் நீ மட்டும் தான்.
கட்டுப்படுத்த முடிந்தவைகளை கட்டுப்படுத்தும் மன உறுதியும், கட்டுப்படுத்த முடியாதவைகளை ஏற்றுக்கொள்ளும் ஞானப் பக்குவமும் நமக்கு வந்துவிட்டால் ...!
திறந்த மனத்துடன்,
நான் மனது அல்ல.நான் இந்த உடலும் அல்ல.. இங்கு இருப்பது இந்த விழிப்பு நிலை மட்டுமே..!
சூட்ஷமநிலை மட்டுமே.. நிரந்தரமானது என்ற உண்மை புரிந்துவிடும்.
இருந்து கொண்டே இருப்பதை இல்லாமை என்கின்றோம். அழிந்து போகக் கூடிய ஒன்றை இருப்பு(பொருள் தன்மை) என்கின்றோம். ஆழமாக சிந்தித்து பாருங்கள் உண்மை தெளிவாக புரிந்து விடும்.இது புரிந்து விட்டால் எதனுடனும் அடையாளப்படுத்திக் கொள்ளமாட்டோம்,எந்த தீர்ப்புகளையும் யார் மீதும் வாசிக்கமாட்டோம்.
முன்முடிவுகள் எதுவுமின்றி,உள்ளதை உள்ளபடி பார்க்கும் நிரந்தரமான சுதந்தர உணர்வு நிலையோடு பேரமைதிக்குள் பிரவேசித்து பெருவாழ்வு பெறுவோம்.

**இயற்கை ஒரு திறந்தவெளிப் புத்தகம்.** இதை படித்து முடிக்க ஒரு யுகமே போதாது.
கற்றுக்கொள்ளும் மனநிலையோடு உள்ளவர்களுக்கு எப்போதும் திறந்திருக்கும் பள்ளிக்கூடங்கள் இவைகள் .
தேடலில் இருப்பவர்களுக்கு மிகச் சிறந்த அனுபவங்கள் இது.

ஆனாலும் மனிதர்கள் ஆகிய நாம் ஏனோ சத்தங்களை நோக்கியே நகர்ந்து கொண்டிருக்கின்றோம். இரைச்சல்களில் தொலைந்துகொண்டிருக்கின்றோம்?
சத்தங்கள் எப்படி அமைதியைத்தொலைத்துவிட்டதோ..
பரபரப்பு எப்படி நின்மதியைத் தொலைத்துவிட்டதோ..
கருவிகள் எப்படி காலத்தை தொலைத்துக்கொண்டிருக்கின்றதோ ..!
அதேபோல.....!
சடங்குகளும், சம்பிரதாயங்களும் இறை தத்துவத்தையும் , ஆன்மீகத்தையும் கால ஓட்டத்தில்.. திசைமாற்றிவிட்டது ..!
**ஆன்மீகம் என்பது உனக்குள் தேடவேண்டிய ஒன்று , ஆன்மீகப் பயணம் என்பது உன்னிலிருந்து தொடங்கவேண்டிய ஒன்று.**

**இந்த ஞானம் மனித உயிர்களுக்கு மட்டுமே சாத்தியமான ஒன்று**




இப்பிரபஞ்ச உயிரில் நீயும் ஓர் உயிர்
இப்பிரபஞ்ச அணுவில் நீயும் ஓர் அணு
அவ்வளவுதான்
இங்கே நடப்பது எல்லாம் நிகழ்வுகள் மட்டுமே...!
நிற்காமல் இது நடந்துகொண்டே இருக்கும்.
பிறப்பு ஒரு நிகழ்வு
இறப்பு ஒரு நிகழ்வு
வாழ்க்கை ஒரு நிகழ்வு
வாழ்வில் நடப்பதெல்லாம் ஒரு நிகழ்வு
நீ ஒரு நிகழ்வு, நான் ஒரு நிகழ்வு,
நமக்கு இடையில் நடப்பதுவும் ஒரு நிகழ்வு.
இங்கே தோன்றுவதும் மறைவதும் எல்லாம் ஒரு நிகழ்வு
நிகழ்வுகள் மட்டும் தான் இங்கே உள்ளது.
காட்சி ஒரு நிகழ்வு... காண்பதும் ஒரு நிகழ்வு...
படைப்பு உண்டென்றால் ....
படைத்தவனும் உண்டு
இயக்கம் உண்டு என்றால்....
இயக்குபவனும் உண்டு.
மனந்திறந்தெழுந்து நில்
வானத்தின் கோணத்தில் பூமியை பார்
அறிவை விரிவு செய்,
பார்வையை விசாலமாக்கு
பேதம் களைந்திடு ..!
இப்பிரபஞ்சம் எங்கும் நீயென்று உணர்ந்திடு...!

அகத்திலே அறவிதை போடு
முகத்தில் வெளிச்சப் பூ மலரும்.
எண்ணத்தில் எழுத்திலும்
ஞானப்பா ஊற்றெடுக்கும்...
சிந்தையில் அறம்சேர் சேவையாய் அது உருவெடுக்கும்.
எண்ணங்கள் ஆத்மாவின் வண்ணங்கள்.
இயற்கையின் படைப்பில் சில சூட்சமங்கள் கண்ணுக்குள் சிக்குவதில்லை.
எது எல்லாம் நீ இல்லையோ
அதையெல்லாம் கழித்துக் கொண்டு
வா....இறுதியில் எஞ்சி நிற்பது எதுவோ !
அதுவே நீ !இலக்கை முடிவு செய்
பயணத்தில் கவனத்தை வை
நிகழ் கணத்தோடு இணைந்தே இரு.
உடலும் மனதும் ஒரு இனக்கத்திற்கு வரட்டும்.
ஆரோக்கியம் பிறக்கட்டும் அமைதி தவழட்டும் அன்பு புன்னகைக்கட்டும்.
இறைவன் விரும்பும் செயலை தான் நீ செய்து கொண்டிருக்கிறாயா?
கலங்காதே .! நிச்சயம்
நீ விரும்பும் செயலை இறைவன் செய்து முடிப்பான்.

**மொழி**
**மனிதனிடம் தொடர்பு கொள்ளும் கருவி.**
**மௌனம்**
**இறைவனிடம் தொடர்பு கொள்ளும் கருவி,**




நீ எதை தேடிக்கொண்டிருக்கிறாயோ... அது உன்னை தேடிக்கொண்டிருக்கிறது.
இது மேலோட்டமான ஆசை அல்ல .
உறுதியான நம்பிக்கை
எதை தேடிக்கொண்டிருக்கிறாயோ அது (நல்லதோ,கெட்டதோ..)அது உன்னை தேடிக்கொண்டு இருக்கிறது.
விளைவுகளுக்கு தேவை உறுதியான நம்பிக்கையே...
கவலைக்கும்,அக்கறைக்கும் வேறுபாடுகளை பல வேளைகளில் நாம் காணத் தவறிவிடுகிறோம் ... அவ்வாறே ஆசையும்,நம்பிக்கையும்
வாழ்க்கையில் எல்லாம் கிடைக்கவேண்டும் என்பதே எப்போதும் எல்லோரதும் ஆசை.
வெறுமனே ஆசை படுவதால் எந்த விளைவுகளும் ஏற்பவதில்லை.
உலகில் *20* வீதத்திற்கும் குறைவான மக்களே போதுமான பணம் மற்றும் வசதிகளோடும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.
மீதமானவர்கள் அப்படியான ஒரு வாழ்க்கைக்கு ஆசைப்படுகின்றவர்களாய் தான் இன்னும் இருகின்றார்கள்.
மிகச் சொற்பமானவர்களே.. மனதின் இந்த சூட்சுமத்தை கண்டுணர்ந்து வென்று நின்மதியோடும்,உள்முக சுதந்திரதோடும் , வாழ்க்கையை நகர்த்துபவர்கள்.
பெரும்பாலானவர்கள் அப்படியான ஒரு வாழ்க்கைக்கு ஆசைப்படுகின்றவர்களாய் தான் இன்னும் இருகின்றார்கள்.
**நம்பிக்கையில்லாத முயற்சியும், முயற்சியில்லாத நம்பிக்கையும் வெற்றிபெறுவதில்லை**

வெறுமனே ஆசை படுவதால் எந்த விதமான விளைவுகளும் ஏற்படாது.
பணம் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று ஆசை படுவர்களுக்கு பணம் வந்து விடுவதில்லை. மாறாக அசைக்க முடியாத நம்பிக்கை வைத்து செயலாற்றுபவர்களுக்கே இது சாத்தியம் ஆகிறது.
ஆரோக்கியம் குறித்து எல்லோரும் ஆசைப்படுகிறார்களா?
அக்கறைப்படுகிறார்களா?
சுற்றிலும் உறவுகள்இருந்தால் நன்றாக இருக்கும் என்று ஆசை படுவதால் உறவுகள் வாய்த்துவிடுமா என்ன?
மாறாக நம்பிக்கை கொடுப்பவர்களுக்கே இது சாத்தியம்.
வாழ்க்கை உயர்வதற்கு சிறந்த மனநிலை வேண்டும்,.ஆனால் சிறந்த மனநிலையை உருவாக்கிக் கொள்வதற்கு,சின்ன சின்ன பழக்கங்களை மாற்றிக் கொண்டாலே போதும்.
நம்பிக்கை எனும் விதையை முழு மனதோடு விதைப்பீர்கள் ஆனால் அது செயலாக முளைத்து வெற்றிக்கனிதரும்.
ஆரோக்கியமும்,வெற்றியும், மகிழ்ச்சியும், நின்மதியும் ஒரு நிழல் போல் என்றும் விடாமல் தொடரும் ....!

உறுதியான நம்பிக்கையோடு இதை கூறுகின்றேன்..!
எதை நீ தேடிக்கொண்டிருக்கிறாயோ... அது உன்னை தேடிக்கொண்டிருக்கிறது.




அது ஒரு மழைகாலம்
ஞானி ஒருவர் சிறிய கிராமம் ஓன்றினூடாக நடந்து கொண்டு இருந்தார்.
அவர் செல்லும் அந்த தெருவின் இரு மருங்கிலும் குட்டி குட்டிக் குடிசைகளே இருந்தது. அவைகளை அவதானித்த படியே நடந்து கொண்டிருந்தார் அந்த ஞானி.
அங்குள்ள குட்டி வீட்டில் சிறுவன் ஒருவன் கவிழ்ந்த தலையோடு,பார்ப்பதற்கு மிகவும் சோகமாக இருப்பதை கண்டார்.
அந்தச் சிறுவனின் சோகத்திற்கான காரணத்தை அறிந்து கொள்ள விரும்பினார் ஞானி.குழந்தையே உன் கவலை என்ன? என்று கேட்டார்.
அந்தச் சிறுவன் கூறினான்.
ஐயா எனது இந்த சிறிய குடிசையில் இருப்பதற்கு கூட ஒரு இடம் இல்லை. எல்லா இடங்களிலும் மழைநீர் ஒழுக்கு விழுந்து கொண்டிருக்கிறது. என்னுடைய இந்த ஏழ்மை நிலை குறித்த கவலையோடு இங்கே உட்கார்ந்து கொண்டேன் என்றான்.

கவலைப்படாதே என்று ஆறுதல் கூறிய அந்த ஞானி,ஒரு சிறிய தொகை பணத்தை அவன் கையில் வைத்து விட்டு தனது பயணத்தைத் தொடர்ந்தார்.
சிறிது தூரம் சென்றதும் அங்கே இன்னும் ஓர் சிறுவனைக் கண்டார். ஆனால் அந்தச் சிறுவன் உற்சாகத்தோடும், மகிழ்ச்சியுடனும் காணப்பட்டான்.
ஞானிக்கோ ஆச்சரியம் இந்த சிறுவனின் மகிழ்ச்சிக்கான காரணத்தை அறிந்து கொள்ள அந்த சிறுவனிடம் கேட்டார்.
குழந்தையே உங்களிடம் ஒருவிதமான உற்சாகம் மற்றும் மகிழ்ச்சியைக காண்கின்றேன். காரணம் என்ன என்பதை அறிந்து கொள்ள ஆர்வமாக உள்ளேன்.
இந்த மழையில் உங்களது குடிசைக்குள் மழைநீர் ஒழுக்கு விழவில்லையா? என்று ஆரம்பித்தார்.
அதற்கு அந்த சிறுவன் “ஐயா”
நான் மிகவும் ஏழை,
இந்த சிறிய குடிசையில் எங்கு பார்த்தாலும் ஒழுக்கு விழுந்து கொண்டே தான் இருக்கிறது. ஆனால் இந்த மழை எனக்கு ஒரு வாய்ப்பை வழங்குகிறது.
அது என்னவென்றால் எந்தெந்த துவாரங்கள் வழியாக மழைநீர் உள்ளே வருகிறது என்பதை எனக்கு இந்த மழை அடையாளம் காட்டுகிறது.
அதை மிகவும் நுட்பமாக அவதானித்த படியே, இந்த மழைக்கு நன்றி கூறிக்கொண்டிருந்தேன். ஏனென்றால் மழை ஓய்ந்த பின் இந்த துவாரங்களை அடைப்பதற்கு எனக்கு இது இலகுவாக இருக்கும் என்று உற்சாகமாக பதிலளிதான்.
இது கேட்டு ஞானி புன்னகைத்தார்.




ஒப்பீட்டளவில் இரண்டும் ஒரேமாதிரியான சூழ்நிலைகள் தான் ஆனால் இரு வேறு மனநிலைகள்.
ஒன்று வாழ்க்கையை ஒரு பிரச்சனையாகப் பார்க்கின்ற மனநிலை.
இன்னொன்று வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளில் கூட வாய்ப்பைக் கண்டுகொள்கின்ற மனநிலை.
எப்போதும் இரண்டு வகையான மனநிலை கொண்ட மனிதர்களை நாம் பார்க்கலாம்.
ஒன்று சூழ்நிலைகளை ஏற்றுக் கொண்டு வாழ்கின்ற மக்கள்.
மற்றயது சூழ்நிலைகளை மாற்றிக் கொண்டு வாழ்கின்ற மக்கள்.
ஒன்று எல்லாம் தலைவிதி என்று இருக்கின்ற சூழ்நிலையை ஏற்றுக்கொண்டு வாழலாம்!
இல்லை எப்படியான சூழ்நிலைகளையும் கையாளும் திறனை இறைவன் எனக்குள் தான் வைத்துள்ளான் என்கின்ற உள்ளுணர்வோடு...அந்த சூழ்நிலையையே மாற்றிவிடவும் துணியலாம்...!
இந்த நிமிடத்தில் என்ன செய்கின்றோமோ.... அது தானே எதிர்காலத்தை தீர்மானிப்பது
இந்த எளிய உண்மையை புரிந்து கொண்டவனுக்கு ....மீதமுள்ள காலத்தை எப்படி புத்திசாலித்தனமாக பயன்படுத்துவது என்பதை புரிய வைக்க வேண்டிய அவசியமே இருக்காது.

இயற்கை எப்போதும் ஏதோ ஒரு சேதியை உயிர்களுக்கு கூறிக்கொண்டேதான் இருக்கிறது.
ஒவ்வொரு பருப்பொருளும் , காணும் காட்சிகளும்,மலைகளும்,மரங்களும்,வெட்ட வெளிகளும் அதிர்வுகள் ஊடாக ஒரு வகையில் எம்மோடு பேசிக்கொண்டே தான் இருக்கிறது. அதனால் தான் சில உயிர்கள் இந்த விடயங்களை தெளிவாக புரிந்து விடுகிறது.
ஏனையவைகளின் நிலை பரிதாபகரத்துக்குரியதாகி விடுகிறது.

இந்த அதிர்வலைகளை உணர்ந்தறிந்து கொள்ள சிறந்ததொரு மனநிலை தேவைப்படுகின்றது
மனம் அனுபவங்களின் பெட்டகமாக இருந்தால் பரவாயில்லை தாறுமாறான எண்ணங்களின் பேரிரச்சல்கள்,,தவறானபழக்கங்கள், கட்டுப்பாடற்ற செயல்கள். இது போன்ற ஏராளமான குப்பைகளால் அல்லவா நிரம்பி வழிகிறது.
தேவையற்ற சத்தங்களை மனதிலிருந்துநீக்கிவிட்டால் அங்கு மிஞ்சியிருப்பது அமைதி மட்டுமே.
மாற்றங்கள் வெளியே நிகழ்ந்து விட வேண்டும் என்று தான் ஒவ்வொரு மனிதனும் ஆசைப்படுகின்றான் ஆனால் மாறாக
மாற்றம் என்பது உள்ளே தானே...! நிகழவேண்டும்! மகிழ்ச்சி, துன்பம், பயம் போன்ற எல்லா உணர்வுகளும் உள்ளுக்குள் தானே நிகழ்கிறது.




ஒவ்வொரு பிரச்சனைகளுக்குள்ளும் தான் வாய்ப்புக்களும்,நாம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்களும், மற்றும் எமக்கான சமிக்ஞைகளும் ஒளிந்திருக்கின்றன.
வாய்ப்புக்களை தேடுகின்ற கண்களில் “வாய்ப்புக்களும்”
பிரச்சனைகளை பார்க்கின்ற கண்களில்
“பிரச்சனைகளும்”தென்படும்.
ஒவ்வொரு பிரச்சனைக்குத் தீர்வு காணும் பொழுதும் மகிழ்ச்சி வருகிறதா?. ஆக ஒவ்வொரு பிரச்சனைக்குள்ளேயும் தான் மகிழ்ச்சி மற்றும் வாய்ப்புக்களும் ஒளிந்துள்ளது.
அதனால் தான் அது குறித்து கவலை படுவதை விட்டு , அதை அக்கறையோடு அணுகிப்பாருங்கள் என்று உளவள நிபுணர்களும் ஆலோசனை கூறுகின்றனர்.
பிரச்சனையை யாரோ ஒருவர் தன் மீது வைத்த மேலதிக சுமை என்று எண்ணுகிறவன். மூழ்கி போகின்றான்.
அது தனக்கு கிடைத்த சிறகுகள் என்று எண்ணுகின்றவன் எழுந்து பறக்கின்றான்.
ஒரு தெளிவான இலக்கு சோம்பேறித்தனத்தை கொல்லும்.
சிறந்த ஞானம் அறியாமையை கொன்று விடும்
அன்பு பயத்தை கொன்று விடும்
விழிப்புணர்வு தேவையற்ற கவனத்தவறுகளை கொன்று விடும்.
அசைக்க முடியாத இறைநம்பிக்கை அவநம்பிக்கைகளை அடியோடு கொன்று விடும்.

வாழ்க்கை என்பது நாம் சகித்து வாழ்வது அல்லவே,
நம்மை நாமே செதுக்கிக்கொண்டு வாழ்வதற்கே...
வாழ்வில் பிரச்சனைகள் என்பது நாளுக்கு நாள் நம்மை செதுக்கி செதுக்கி
ஒரு முழுமையை நோக்கி நகர்த்திவிட தான்.
ஒரு முழுமை நோக்கிய பயணம் தானே வாழ்க்கை.!
கற்பூரவள்ளி போன்ற சில வாசம் வீசும் இலையை கசக்கும் போது மட்டுமே அதனுடைய முழு வாசம் வெளிப்படும்...
அது போல தான் பிரச்சனைகள் உங்களைப் பிளிந்தெடுப்பது உங்களிடம் உள்ள திறமையும் வெளியே கொண்டுவரவே....!
ஒரு நிலையிலிருந்து அடுத்த நிலைக்கு நகர்த்திவிடவே..
பிறப்பின் கர்மாவை கரைத்து விடவே..!
இப் பிறப்பின் நோக்கத்தை நிகழ்த்திவிடவே ..!

வாழ்க்கையில் நிச்சயமாக வலி உண்டு, ஆனால் ஒரு வழியும் நிச்சயம் உண்டு என்பதை நாம் மறந்து விடக் கூடாது ..!
வாருங்கள் ....!
வசைபாடுவதை நிறுத்திவிட்டு, வாய்ப்புக்களை தேடுவோம்...!
வாழ்க்கை வாஞ்சையுடன் எமக்காய் காத்திருக்கின்றது.




**நாளுக்கு நாள் வாழ்வை மேம்படுத்தும் ஒரு சிறந்த நண்பனையும் ஒரு சிறந்த போட்டியாளனையும் உங்களுக்கு அறிமுகம் செய்து வைக்க போகின்றேன் !**

இதன் பின்பு வாழ்க்கை உங்களுக்கு சலிப்பாக இருக்கப் போவதில்லை.
மாறாக சவாலாக இருக்கப் போகிறது.
யாரோடும் யாரும் போட்டி போடவேண்டிய அவசியமே இனி இல்லை.
யாரோடும் யாரும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டிய அவசியமும் இல்லை.
**ஆரோக்கியமான போட்டி உங்களோடு நீங்கள் போடுவது தான்...!**
நேற்றைய “நான்” ற்கும்.
இன்றைய “நான்” ற்கும் ஆன போட்டி...!
நேற்று இருந்த ஆரோக்கியத்தை விட, இன்று இருக்கும் ஆரோக்கியத்தை மேலும் எப்படி மேம்படுத்தலாம் என்ற
நேற்றைய “நான்” ற்கும்.
இன்றைய “நான்” ற்கும் ஆன போட்டி...!
இன்றைய வருமானத்தை எப்படி மேலும் ஒரு படி அதிகமாக ஈட்டலாம் என்ற
நேற்றைய “நான்” ற்கும்.
இன்றைய “நான்” ற்கும் ஆன போட்டி...!
நேற்று எனக்கு என்னோடு இருந்த உறவை விட இன்றைய நான் என்னோடு எப்படி மேலும் உறவை வலுப்படுத்தலாம் என்ற போட்டி...!
எனது சக்தியை இன்று எப்படி மேலும் சிறப்பாக செலவு செய்யலாம் என்ற
நேற்றைய “நான்” ற்கும்.
இன்றைய “நான்” ற்கும் ஆன போட்டி...!

**வாழ்வில் இரண்டு வலிகள்...!**

வாழ்வில் இரண்டு வழிகள் தான் உள்ளது
இரண்டுமே வலிகள் நிறைந்தது, கடினமானது
ஒன்று நாமாக தெரிவு செய்வது. மற்றையது எம்மை தானாக தேடி தெரிவு செய்வது.. !
இதில் எந்த வலியை நீங்கள் தெரிவு செய்யப்போகிறீர்கள் ?
ஆரோக்கியத்தை தெரிந்தெடுத்தால்.....
அதற்காக உடல் உழைக்கும் போது வருமே அந்த உடல் வலியா? இல்லை
எந்த முயற்சியும் செய்யாமல் விட்டதால் நோய் வந்து அதுவாக தருமே அந்த வலியா?
வயிற்றுப் பிழைப்புக்காக, வசதிக்காக ஓடி ஓடி உழைக்கும் போது ஏற்படுமே அந்த வலியா?
இல்லை, வறுமை வந்து வாழ்க்கையைப் புரட்டி எடுக்குமே அந்த வலியா?

சுய கட்டுப்பாட்டுடன், நேரக் கட்டுப்பாடு, ஒழுக்க கட்டுப்பாட்டுடன் வாழும் பொழுது வருமே அந்த வலியா,
இல்லை, எந்தக் கட்டுப்பாடுமின்றிபோராடும் போது வாழ்க்கை தருமே நெருக்கடி அந்த வலியா ..?
உறவுகளோடு தினமும் போராடும் போது எற்படுமே அந்த வலியா? இல்லை
உறவுகள் யாருமற்ற நிலையில் தனிமை தருமே அந்த வலியா?
**மனிதனை வெல்ல எண்ணாதே..! உன் மனசை வெல். ஏனென்றால்**
**உடல் என்பது ஒன்றுமில்லை...**
**எண்ணங்களாலும், உணர்வுகளாலும் இயக்கப்படும் ஒரு கருவியே ...!**




## தனிமை சிந்தனை சவுக்கால் அடிக்கும்

தனிமைக்கு என்று ஒரு தனி குணம் உண்டு. அது நம்மிடமே கேள்வி கேட்டு, எம்மிடமே பதிலைபெற்று நம்மையே சிந்தனை சவுக்கால் அடிக்கும் விசித்திரம் கொண்டது.
அதனால் தான் தனிமையை எளிதாக எதிர் கொள்ளும் மனத்தைரியம் யாரிடமும் இருப்பதில்லை.
வாழ்க்கையின் நோக்கம் குறித்த தேடல் உள்ளவர்களுக்குள் இந்த தைரியம் எப்படியோ உள்நுழைந்துவிடும். உள் நோக்கிய பயணத்திற்கு... விழிப்புணர்வு, நிகழ்கணலயிப்பு, தனிமையை எதிர்கொள்ளும் தையிரியமுமே தேவை ! அது
வாழ்க்கையின் நோக்கத்தை அதன் போக்கில் ஒருநாள் உணர்த்திவிட்டு செல்லும். அதன் பின்
**என் இனிய தனிமையே** ....என்று கொண்டாட ஆரம்பித்துவிடுவீர்கள்

தனிமையும், உள்முக சிந்தனையும் நிகழ் கணத்தில் இணையும்போது ஒரு பேரமைதி வந்து உன்னை சூழும் , நிம்மதி வந்து உன்னை இறுக்கி அணைக்கும். சுதந்திரம் பரிசளிக்கப்படும்.
**இது மனத்துக்குள் செல்லும் வழி**
**இது புலன் கடந்த ஓர்அறிவு.**

## தனித்திருப்பது-தனிமையில் இருப்பது இரண்டும் ஒன்றல்ல

ஒருவன் உடலால் தனித்திருப்பது அல்ல தனிமை.. தன் குடும்பம்,உறவுகள்உற்றார் அனைவருமே சூழ சுற்றிருந்தும் தனிமையும், வெறுமையும், மட்டுமே ஒருவன் உணருவானே ஆனால்..
அது தான் தனிமை..!!!
இன்னும் ஒருவன்
உடலால் தனித்திருக்கிறான். ஆனால் மனதால் இந்த பிரபஞ்சத்தில் அத்தனை உயிர்களோடும் கலந்து தூயஅன்பையும் இரக்கத்தையும் வெளிப்படுத்திக்கொண்டிருப்பான்... இது எப்படி தனிமையாகும்..? பேரிணக்கம் அது. அது மட்டுமல்ல அதே ரவசவத்தையும்,பேரன்பையும் பலமடங்குகளாக...மீண்டும் மீண்டும் பெற்றுக் கொண்டும் இருப்பான்.
அப்போது அமைதியின் கரங்களில் அவன் இதயம் தவழ்ந்து கொண்டிருக்கும். அன்பு ஊற்றெடுக்கும் ஆனந்தம் திளைக்கும்.
பரவசத்தில் மிதப்பான் அவன்.
இப்போ பார்க்கும் கண்களுக்கு. .. அவன் தனிமையில் இருப்பது போன்று தோன்றும். அவன் தனியே இருக்கின்றான் ஆனால் தனிமையில் இல்லை.




மண்ணில் உள்ளே போடும் விதைகளுக்குரிய கனிகள் மட்டுமே விளையும்.

இங்கேயும் அதே நிலை தான் எண்ணங்களே தான் சிந்தனையாகி .. செயல் விளைவுகளாக ...வெளியே முளைத்து வருகிறது.

நீங்கள் தான் தோட்டக்காரர்கள்..! போடும் விதைகளுக்குரிய கனிகளையே அறுவடை செய்ய நேரும்... எதை விதைக்க போகிறீர்கள்..?

எதையும் விதைக்காது போனால் கூட இங்கே ஏதாவது முளைத்துக்கொண்டே தான் இருக்கும். தேவையில்லாத செடிகள் , புல், முள் செடிகள்.இதே போல தான், கவலைகளும்,தீமைகளும் எதுவுமே செய்யாமல் இருந்தால் கூட அது தானாக வரும்.

விதைகளை தேர்ந்தெடுப்பதும், விதைப்பதும் எப்படி முக்கியமோ .. அதே போல் பராமரிப்பும் இங்கே அவசியம்.

ஒரு நூலோடு இன்னொரு இணைக்க இணைக்க ஒரு ஆடை உருவாகின்றது.

ஒரு கல்லோடு இன்னொரு கல்லை அடுக்க அடுக்க ஒரு கட்டடம் உருவாகின்றது. இதே போல ஒன்றோடு ஒன்றை கூட்ட கூட்ட தான் இன்னொன்று உருவாகின்றது. ஆனால் கழிக்க கழிக்க உருவாகும் ஒன்று...உண்டு.. அது தான் சிலை . ஆம் சிற்பி சிலை வடிக்க ஒரு பாறையை தெரிவு செய்கிறான்.

அந்த கல்லிலே..ஒரு சிலையை தன் மனக்கண்ணால் காணுகின்றான். தான் காணும் அந்த சிலையை விட்டு விட்டு தேவையற்ற மற்ற பகுதிகளை செதுக்கி செதுக்கிக் கழிக்கின்றான் . அங்கே ஒரு அழகான சிலை மெல்ல மெல்ல வெளிப்படும். இது போல தான் நீயும் உன் தேவையில்லாத எண்ணங்களையும், தேவையற்ற பழக்கங்களையும் , தீமையான அனைத்தையும் கழித்து கொண்டே வரும் போது , எஞ்சிநிற்பது தெய்வீகமான தன்மை மட்டுமே...




பயணிக்க வேண்டிய இடத்தை தீர்மானித்துக்கொள்ளுங்கள். அப்போது தான் பயணிக்க வேண்டிய திசை எதுவென்று தெரியும் . போய் சேர வேண்டிய துறைமுகம் எது என்று தெரியாவிட்டால் ......! எந்த திசையில் காற்றடித்தால் தான் உங்களுக்கு என்ன....? ஒரு நோக்கமும், அதை செயலாக்க தேவையான சக்தியும் உங்களுக்குள் தான்.இருக்கிறது. உங்கள் உயிர் நோக்கம் என்ன என்பதை கண்டு பிடியுங்கள். இலக்கு தெளிவாகிவிடும். நீங்கள் பயணிக்க வேண்டிய திசையும், உங்கள் வாழ்வின் நோக்கமும் தெரிந்துவிடும். தெளிவான ஒரு இலக்கும், அதை செயலாக்க தேவையான ஒரு திட்டமும், அந்த இலக்கோடு சுயநலமற்ற ஒரு நோக்கமும் இணைந்து விட்டால் வெற்றி உங்களை விடாமல் தொடரும்...

எதைகொடுக்கின்றோமோ அதையே பெற்றுக்கொள்கிறோம். எதை விதைக்கின்றோமோ அதையே... அறுவடை செய்கின்றோம்.

இது குறித்து சற்று ஆழ்ந்து சிந்திக்கும் போதே இந்த உண்மை தெளிவாக புலப்படும். எண்ணங்களே.. சிந்தனையாகவும், செயலைத் தூண்டும் சுரப்பியாகவும், பின்பு செயலாகவும், பழக்கமாகவும், ஒருவனது குணமாகவும். ஏன் .. அந்த பாத்திரமாகவும் .. பரிணமித்து நிற்கிறது. பெருவிருட்சமாக வானுயர வளர்ந்து நிற்கும் மரம் அது என்ன மரமோ .... எந்த விதை போடப்பட்டதோ ... அதற்குரிய பயனை அது கொடுக்கிறது.இந்த கனிகள் கசக்கிறது என்றோ.... புளிக்கிறது என்றோ... மரத்தை குறைகூறுவது எத்தனை அறியாமை...! எனக்கு மட்டும் ஏன் இந்த கஸ்ரம் என்று புலம்பித் திரிவதால் .. என்ன பயன்...? மாமரத்தில் இருந்து ஆப்பிள் பழம் வரப்போவது இல்லை. விழிப்புணர்வு அற்ற நிலையில் கவனமின்றி எண்ணம் எனும் விதைகளை விதைப்போமானால் அதன் விளைவுகள் நன்மையாக இருந்தால் என்ன, தீமையாக இருந்தால் என்ன , அதை நாம் அனுபவித்தே தான் தீரவேண்டும் !

Thank you for reading! - Ra Jegatheesh